Dinamalar dated 7/2/2018
(Cellphone Training)

# மாணவர்களுக்கு மொபைல் போன் பழுது நீக்கும் பயிற்சி

**புதுச்சேரி, பிப். 7–**

தாகூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மொபைல் போன் பழுது நீக்கும் பயிற்சி முகாம் நேற்று துவக்கி வைக்கப்பட்டது.

புதுச்சேரியில் அரசு கலை கல்லூரிகளில், கலை பட்ட படிப்பு படிக்கும் மாணவர்கள், நவீன காலத்தில் உள்ள தொழில்நுட்ப தகவல்களை தெரிந்து கொள்ளும் வகையில், திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப் படுகிறது. கடந்த மாதம், மாணவர்களுக்கு லேப்டாப் பழுது நீக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. அதை தொடர்ந்து, மொபைல் போன்பயிற்சிதுவக்கவிழா நேற்று நடந்தது. கல்லூரி கருத்தரங்கு கூடத்தில் நடந்த விழாவில், கல்லூரி ஆங்கிலத்துறை தலைவர் கலா வரவேற்றார். கல்லூரி முதல்வர் சசிகாந்ததாஸ் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் லேப்டாப் பயிற்சி பெற்ற மாணவர்கள்,. தங்களின் அனுபவங்களை பகிர் கொண்டனர். அமைச் கமலக்கண்ணன் சிற விருந்தினராக கல கொண்டு, குத்துவிள ஏற்றி பயிற்சி முகா துவக்கி வைத்தார். நிக சியில் மொபைல் போ பழுதுநீக்கும்பயிற்சி அ கும் டி.சி.ஐ.எல்.ஐ.டி. நி வன மேலாண் இயக்கு வெற்றிவேல் உள்பட ப கலந்து கொண்டனர். க லூரியின் வேலை வாய் அலுவலக முனை வேல்ராஜ் நன்றி கூறினா 200க்கும் மேற்பட்ட க லூரி மாணவர்கள் பயி முகாமில் கலந்து கொண் னர். முன்னதாக கல்லு வளாகத்தில் மரக்கன்றுக நடப்பட்டது.




லாஸ்பேட்டை தாகூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவர்களுக்கு மொபைல் போன் பழுது நீக்கும் பயிற்சி முகாமை அமைச்சர் கமலக்கண்ணன் துவக்கி வைத்து பேசினார்.

Dinamalar dated 7/2/2018

# பொறுப்பை உணர்ந்து படிக்க வேண்டும்

## மாணவர்களுக்கு அமைச்சர் 'அட்வைஸ்'

**புதுச்சேரி, பிப். 7–**

கல்லூரியில் பயிலும் மாணவர்கள், பொறுப்பை உணர்ந்து படிக்க வேண்டும் என கல்வித்துறை அமைச்சர் கமலக்கண்ணன் பேசினார்.

தாகூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடந்த மொபைல் போன் பழுது நீக்கம் செய்வது தொடர்பான பயிற்சி முகாமை, துவக்கி வைத்து அமைச்சர் கமலக்கண்ணன் பேசியதாவது;

புதுச்சேரியின் பழமையான கல்லூரியான தாகூர் கலை கல்லூரி, அதன் தன்மையை இழந்து விடுமோ என்ற அச்சத்தில் இருந்தபோது, சசிகாந்ததாசை முதல்வராக நியமித்தோம். தாகூர் கல்லூரியில் மிகப் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த மாற்றம் அனைத்து கல்லூரிகளிலுல் ஏற்பட வேண்டும். சசிகாந்ததாஸ், எந்த கல்லூரியில் இருந்தாலும் அந்த கல்லூரியில், கல்வி மட்டும் இன்றி, மாணவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு உதவக்கூடிய பல்வேறு பயிற்சி அளிக்கப்படும்.

தமிழகத்துடன் புதுச்சேரியை இணைக்க முடிவு செய்தபோது, கல்லூரி மாணவனாக, போராட்டத்திற்கு தலைமை தாங்கினேன். அதனால், என் கல்வி தகுதி எதிர்பார்த்தது போல் அமையவில்லை. அதனால் தினந்தினம் வருத்தப்படுகிறேன்.

அதனால் தான், ஆசிரியர்கள் அனைவரிடமும் வேண்டுகோள் வைத்தேன். ஒரு ஆசிரியர், 10 மாணவர்களின் கல்வி சார்ந்த முன்னேற்றம் இன்றி, குடும்ப சூழல், மாணவன் நலம், பொருளாதார நிலை, தனிப்பட்ட பிரச்னை உள்ளிட்டவற்றை கவனிக்க வேண்டும் என வேண்டினேன்.

ஆசிரியர்களும் மாணவர்களை கவனிக்க துவங்கினர். தற்போது, ஆசிரியர்கள் தன் மீது அக்கறை செலுத்துவதை உணர்ந்து, மாணவர்கள் படிக்கின்றனர்.

தாகூர் கல்லூரியில் இவ்வளவு மாணவர்கள் அமைதியாக அமர்ந்திருப்பது மிகப்பெரிய மாற்றம். நான் படிக்கும்போது, கடைசி பெஞ்சில் இருந்து சத்தம்போட்டவர்கள் எல்லாம், இன்று சமூகத்தில் படுமோசமான நிலையில் உள்ளனர். அந்தந்த காலத்திற்கு உரிய பொறுப்பை மாணவர்கள் உணர்ந்து படிக்க வேண்டும். எந்த விஷயத்தையும் பாசிட்டிவாக அணுகும்போது, எல்லாமே நடக்கும் என்ற நம்பிக்கை ஏற்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

Dinamani dt. 7/2/2018
Cellphone Training

2 தினமணி விழுப்புரம் — புதுச்சேரி

# வலிமை மிகுந்த சாதனமாக செல்லிடப்பேசி மாறிவிட்டது

## அமைச்சர் கமலக்கண்ணன்

